REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★

நம் நாடு

தி. மு. க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை : ஆடி 30ௗ புதன் (14—8—57) ★ ★ வெளியூர்: ஆடி 31ௗ வியாழன் (15—8—57) [இதழ் 51

மூன்று நிமிடங்களில் தூக்கம்!

புதுடில்லி, ஆக. 13—

மூன்று நிமிடங்களில் ஒருவருக்குத் தூக்கம் தரக்கூடிய புதுமருந்து ஒன்றை பிரெஞ்சு டாக்டர் ஒருவர் கண்டுபிடித்திருக்கிறாராம்! இந்த மருந்துபற்றிய முழு விபரங்களையும் அறிய முயற்சிகள் மேற்கொண்டிருப்பதாக மத்திய சுகாதார மந்திரி டி. பி. கார்மார்க்கர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மக்கள் சபையில் கூறியிருக்கிறார்.

தொழிற்சாலை அசாமிற்கு வெளியே நிறுவப்பட :

'எங்கள் பிணத்தின்மீது நடக்கவேண்டும்'

'கோரிக்கை உணர்ச்சி வயப்பட்ட வீண் எண்ணமல்ல'

டெல்லி சர்க்காருக்கு மக்கள் சபை உறுப்பினர் எச்சரிக்கை

புதுடில்லி, ஆக. 13—

"அசாமில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை வேண்டும் என்பது, ஏதோ உணர்ச்சிவயப்பட்ட கோரிக்கை அல்ல; அல்லது வீண் எண்ணமும் அல்ல! கடந்த ஜூலை 29-ந் தேதியன்று மாநில மெங்கனும் நடைபெற்ற அர்த்தால், இந்தக் கோரிக்கைபற்றி மக்கள் கொண்டுள்ள உறுதியான எண்ணத்தை எடுத்துக்காட்டுவதாகும். மக்களின் ஒன்றுபட்ட குரலையும், நிபுணர் குழுவின் சிபாரிசுகளையும் மீறி நீங்கள் எண்ணெய்த் தொழிற்சாலையை அசாமிற்கு வெளியே நிறுவ எண்ணினால், எங்கள் பிணத்தின்மீது நடந்து சென்றுதான் வேண்டும்"

என்று அசாமைச் சேர்ந்த பி. சோ. உறுப்பினர் ஹேமபோராவ் என்பார், மக்கள்சபையில் எச்சரித்திருக்கிறார்.

சென்னை-ஆந்திரா எல்லைத் தகராறு

மத்திய உள்நாட்டமைச்சருடன் காமராசர் விவாதிப்பார்

சென்னை, ஆக. 13—

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் கலந்து கொள்ள இத்திங்கள் இறுதியில் சென்னை மாநில முதலமைச்சர் டில்லி செல்லுகிறார். சென்னைக்கும்—ஆந்திரத்திற்கும் இடையே உள்ள எல்லைத் தகராறு பற்றிய படாஸ்கரின் முடிவுகள் பற்றி மத்திய உள்நாட்டு அமைச்சர் பந்த், முதலமைச்சர் காமராசருடன் பேசக்கூடும் என்று தெரிய வருகிறது.

பெட்ரோல் விலைகளை குறைக்குமாறு எண்ணெய்க் கம்பெனிகளுக்கு விண்ணப்பம்

'ரூ. 2 கோடி மிச்சப்படலாம்' என்கிறது சர்க்கார்

புதுடில்லி, ஆக. 13—

"இந்தியாவில் உள்ள அன்னிய நாட்டு எண்ணெய்க் கம்பெனிகள் தங்களின் விலைக் கொள்கையை மாற்றிக் கொள்ள வேண்டும்"

என்று, டெல்லி சர்க்கார் கேட்டிருக்கிறார்களாம்!

அதாவது, மெக்சிகோ விலை நிர்ணயிப்புகளுக்குப் பதிலாக பாரசீகப் பிரதேச விலை நிர்ணயிப்புகளை வைத்துக் கொள்ளுமாறு அந்தக் கம்பெனிகளை டெல்லி சர்க்கார் கேட்டிருக்கிறதாம்!

இதனால் இந்தியாவுக்கு ரூ. 2 கோடி வரை மிச்சமாகும்!

இந்தத் தகவலை மக்கள் சபையில் மந்திரி மாளவியா தெரிவித்திருக்கிறார்.

"நாம் இந்த நாட்டிலேயே நமக்குத் தேவையான எண்ணெயைப் பெறும் வரை பெட்ரோலியம் பொருள்களின் விலையைக் குறைப்பது என்பது சாத்தியமானதாயிராது; மேலும், நாம் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களுடன் மேற்கொண்ட ஒப்பந்தங்களைத் திருத்தி அமைத்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்பதும் சாத்தியமாயிராது" என்றும் அவர் கூறியிருக்கிறார்.

கடன் தருவது குறைந்து விட்டதாம்!

சென்னை, ஆக. 14—

உணவுத் தானியங்கள் மீது பாங்கிகள் தரும் கடனைக்குறைக்க வேண்டுமென்று ரிசர்வ் பாங்கி உத்திரவு பிறப்பித்ததும், 'அந்த உத்தரவை, எதிர்பார்த்தவாறு பாங்கிகள் அமுல் செய்யவில்லை' என்றும், கண்டிப்பாக உத்தரவை அமுல் நடத்த வேண்டுமென்றும் மீண்டும் கட்டாய உத்தரவு ஒன்றை ரிசர்வ் பாங்கி பிறப்பித்ததும் அறிந்த ஒன்றாகும்.

ஆனால், மக்கள் சபையில், மத்திய நிதி அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், 'உணவுத் தானியங்கள்மீது கொடுக்கப்பட்ட கடன் மே இறுதியில் ரூ. 40 கோடி என்றும், ஜூலை இறுதியில் ரூ. 35 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

ஆழம் தெரியாமல் இறங்கிவிட்டனர்?

திண்டாடும் நிலைமை உருவாகிவிட்டது?

புதுடில்லி, ஆக. 14—

இந்தியப் பேரரசுக்கு அயல் நாட்டுச் செலாவணியில் கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் திட்டக்குழு, திண்டாடும் நிலை உருவாகியுள்ளதாம்.

இந்த அவல சூழ்நிலையில் திட்டங்கள் அனைத்தும் எதிர்பார்த்தவாறு நிறைவேற்ற இயலாது என்பதை உணர்ந்து, குறைக்கும் படலத்தில் ஈடுபட்டு, பல 'வெட்டு வேலை'கள் செய்ய திட்டக்குழு முனைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

மாநிலங்கள் அனைத்தும் மீண்டும் தங்களுடைய திட்டங்களை ஆராய்ந்து அயல்நாட்டுச் செலாவணி அதிகம் தேவைப்படாத நீர்ப்பாசனத் திட்டங்களை மட்டும் நிறைவேற்றவேண்டும் என்று திட்டக்குழு கூறியுள்ளதாம்.

இந்தத் தகவல்களை மக்கள் சபையில், மத்திய நீர்ப்பாசன அமைச்சர் பட்டீல் தெரிவித்துள்ளார்.

'இரும்புத்தொழிற்சாலைகள் அனைத்தும் வடநாட்டிலேயே நிறுவப்படக்கூடாது'

'தென்னாட்டிலும் அவை நிறுவப்பட வேண்டும்'

புதுடில்லி, ஆக. 13—

"நாட்டின் தொழிலபிவிருத்தி நலனைக் கணக்கில் கொண்டு பார்த்தாலும், உருக்குத் தொழிற்சாலைகள் அனைத்தையும் நாட்டின் ஒரே பகுதியில், நிறுவுவது கூடாது என்பது தெரியவரும். இவற்றில் சில தென்னாட்டில் நிறுவப்பட வேண்டும். பெல்லாரியில் ஏராளமான இயற்கை வளங்கள் இருக்கின்றன. குறிப்பாக அங்கு ஒரு இரும்பு உருக்குத் தொழிற்சாலை நிறுவப்பட வேண்டும். அங்கு கிடைக்கும் மலிவான இரும்புக் கனி, தொழிற்சாலை சிக்கனமாக நடைபெற உதவுவதாகும்"

என்று, காங்கிரஸ்காரரான மைசூர் டி. சுப்பிரமணியம் அவர்கள் மக்கள் சபையில் வற்புறுத்தியிருக்கிறார்.

சேலத்தில் 164 கைதிகள் விடுதலை செய்யப்படுவர்

சேலம், ஆக. 12—

இந்திய விடுதலைப் போராட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சேலம் மத்திய சிறையிலிருந்து தண்டனைக் குறைப்பின் காரணமாக இம்மாதம் 14-ந்தேதியன்று 164 கைதிகள் விடுதலை செய்யப்படுகிறார்கள்.

தண்டனை அனுபவிக்கும் காலத்தில் சிறையிலிருந்து தப்பித்துச் செல்ல முயற்சித்தவர்களுக்கு இத்தண்டனைக் குறைப்பு இல்லை. சிறையில் 792 கைதிகளுக்குத் தண்டனைக் குறைப்பு கிடைத்துள்ளது. இம்மாதம் 15-ந் தேதியன்று சேலம் மத்திய சிறையில் உள்ள கைதிகளுக்கு விருந்தளிக்கப்படும். (ந—நி)

விலை உயர்வைத் தடுத்துவிடுவார்களாம்!

டில்லி, ஆக. 14—

சென்னை, மைசூர், சேரளம் முதலிய மாநிலங்களில் சர்க்கரை விலை உயர்வைத் தடுக்க 40,000 டன் சர்க்கரை மத்திய அரசாங்கம் தரமுன் வந்துள்ளது.

உ. பி., பீகார் மாநிலங்களிலிருந்து 25,000 டன் சர்க்கரை தென்னாட்டிற்கு அனுப்பப்படுமாம்

ஆகஸ்டுத் திங்கள் இறுதிக்குள் இந்த ஏற்பாடு அமுலாகுமாம்; சர்க்கரை விலையும் குறைந்து விடுமாம்!

10,000 போக்கு-வரத்துத் தொழிலாளர் வேலைநிறுத்தம்

ஊதியத்தை உயர்த்துமாறு குரலெழுப்பினர் - கண்ணீர்ப்புகையைப் பரிசாகப் பெற்றனர்!

வார்சா, ஆக 13—

போலந்தில் முக்கிய நகரமான லோட்சிலும், மற்றும் பெரிய தொழிற்சாலைகள் உள்ள நகரங்களிலும் பஸ், டிராம், போக்கு-வரத்தில் வேலை செய்யும் சுமார் 10,000 தொழிலாளர்கள் தங்களுக்குக் கிடைக்கும் ஊதியம் போதவில்லை என்றும், அதிகச் சம்பளம் கோரியும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போலீசார் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள்மீது கண்ணீர்ப் புகையைப் பிரயோகித்துக் கூட்டத்தைக் கலைத்தனராம்.

ஊதிய உயர்வு வேண்டும் என்றும், ஒருமாத சம்பளம் (போனசாக) வெகுமதியாக அளிக்கப்பட வேண்டும் என்றும், கூலி உயர்வு வேண்டும் என்றும் நியாயமான கோரிக்கைகளை வற்புறுத்திய தொழிலாளர்கள் கண்டது, போலீஸ் தந்த பரிசு—கண்ணீர்ப் புகை!

காவிரி டெல்டாவில் எண்ணெய் ஆராய்ச்சி செய்வது பயனுள்ளதுதானும்!

மத்திய மந்திரியின் கருத்து

புதுடில்லி, ஆக. 13—

"காவிரி டெல்டா பிரதேசம் மிக வளமான பிரதேசமாகும்; அங்கு எண்ணெய் கிடைக்குமா என்பது குறித்து ஆராய்ச்சி செய்வது, பயனுள்ளதே"

என்று, மத்திய சுரங்கம் மற்றும் எரி பொருள் இலாகா மந்திரி மாளவியா மக்கள் சபையில் கருத்தறிவித்திருக்கிறார்.

தடை உத்தரவு நீடிப்பு

சென்னை, ஆக. 13—

சென்னை நகரில் கூட்டங்கள் ஊர்வலங்கள் நடத்துவதற்குப் போலீஸ் கமிஷனரின் முன்அனுமதியைப் பெறவேண்டும் என்று சென்னை நகர போலீஸ் சட்டத்தின் 41-வது பிரிவின்கீழ் அமுலாக்கப்பட்ட தடை உத்தரவு ஆகஸ்டு 31-ந் தேதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

19,14,476 டன் இரும்பு-உருக்கு இறக்குமதியாம்!

புதுடில்லி, ஆக. 13—

1956—57-ல் இந்தியத் துறைமுகங்களில் மொத்தம் 19,14,476 டன் இரும்பு உருக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசாங்க உருக்கு-சுரங்க எரி பொருள் அமைச்சர் சுவரண்சிங் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

தென்னிந்திய—வடஇந்திய 'மீட்டர் கேஜ்' இணைப்பு

காந்த்வா—ஹிங்கோலி மீட்டர் கேஜ் இரயில் பாதை இணைப்பு 1959-ம் ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படக்கூடும் என்று மக்கள் சபையில் உதவி இரயில் அமைச்சர் ஷா நவாஸ்கான் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம், தென்னிந்தியாவை வடஇந்தியாவுடன் இரயில்பாதை (மீட்டர் கேஜ்) மூலம் இணைப்பதாகும்.

நம் நாடு
தி.மு.க.தினஇதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 14—8—57 புதன்

இதோ! சமூக விரோதி!

'மக்களில் ஒரு சாராருக்கு என்ன அதிருப்தி ஏற்படுவதாக இருந்தாலும், சாதாரண மனிதன் வாங்கி உண்ணும் படியாக உணவு தானியங்களின் விலையைக் குறைக்க, அரசாங்கம் எந்த நடவடிக்கையையும் எடுக்கத் தயங்காது"

"நாட்டில் தொழிலாளரிடை இருந்துவரும் அமைதியின்மைக்கு உணவுத் தானியங்களின் விலை உயர்வே காரணம். சாதாரண மக்களிடை திருப்தி நிலவச் செய்யவும், இரண்டாவது திட்டத்தில் முழு வெற்றி காணவும், முதலில் உணவு முனையில், உற்பத்தி—விலை இரண்டிலும் வெற்றி காணவேண்டும்.

மேற்குறிப்பிட்டுள்ளவாறு இந்தியப் பிரதமர் நேரு, காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த மக்கள் சபை உறுப்பினர் குழுக் கூட்டம் ஒன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டிருக்கின்ருர்.

பிரதமரின் இப்பேச்சைச் செவியுறும் மக்களில் சிலர், உணவு தானியங்களின் விலை இனி குறைந்துவிடும், இதுவரை உண்டு வந்ததுபோல் இல்லாமல் குறைந்த விலையில் உணவு தானியங்களை நிரம்ப வாங்கி வயிருர உண்ணமுடியும் என்றெல்லாம் மிகமிகப் பூரிப்புடன் நம்பக்கூடும். அவ்வாறு நம்புவதும் மக்கள் இயல்பேயாகும்.

சாதாரண மக்களும் வாங்கி வயிருர உண்ணக்கூடிய அளவில் உணவு தானியங்களின் விலையைக் குறைப்பதற்கு எல்லாவித நடைமுறைகளையும் இனித்தான் மேற்கொள்ளப் போவதாக இந்தியப் பிரதமர் கூறுவது கேட்டு பெரும் மகிழ்வெய்துகின்றவர்களும், பெரும் நம்பிக்கைக் கொள்ளுகின்றவர்களும், அவ்வாறு கொள்ளுகின்ற அளவுடன் அவர்களால் இருந்துவிடவும் முடியாது. ஏனெனில், உணவு தானியங்களைத் தேவைப்படும் அளவிற்கு வழங்குவதையும்: அதுவும் அவைகளைக் குறைந்த விலைக்கு வழங்குவது என்பதையும், இன்றுதான் நேரு பெருமகன் முதல் முதலாகப் பேசி, பொதுமக்கள் செவிமடுக்கின்ருர்கள் என்பதில்லை. இத்தகைய செவிக்கு மட்டுமே இன்பமளிக்கும், உணவுத் துறை பற்றிய ஆசை மொழிகளை, இதற்கு முன் ஏற்பட்ட நெருக்கடியான நேரங்களில் எல்லாம், இதே நேரு பெருமகன் பேசியுள்ளதைக் கேட்டுக் கேட்டுப் பொதுமக்களின் செவிகள் செவிடாகிப்போயிருக்கின்றன. உணவுத் துறை பற்றி அளிக்கப்பட்டுவந்திருக்கும் நல்லுரைகளுக்கொப்ப, மக்கள் மனநிறைவும் மகிழ்ச்சியும் கொள்ளுகின்றவகையில் செயல் முறைகள் அமைந்திருந்தது அறவே கிடையாது.

உணவுத் தானியங்கள் தேவையான அளவு கிடைக்கப் பெருததாலும், கிடைக்கக் கூடிய குறைந்தபட்ச உணவுப் பொருள்களையும் தங்கள் ஆற்றலுக்கு மீறிய விலை கொடுத்து வாங்க வேண்டி இருந்ததாலும் காங்கிரசு ஆளவந்தார்கள் மீது பொதுமக்களுக்கு இருந்த ஆத்திரத்திற்கு அளவேயில்லை. பொதுமக்களிடமிருந்து வந்த அவ்வாத்திரத்தைக் கணிசமாகத் தணிப்பதற்காகவே, இதற்கு முன்பு எல்லாம் நேரு பெருமகன் உணவுத் துறை பற்றி இன்று குறிப்பிட்டுள்ளதைப்போல் பலமுறை, இன்று கூறியுள்ளதைவிட மிகுதியான கண்டிப்பும் கனிவும் வெளிப்பட குறிப்பிட்டிருக்கின்ருர் என்பதை பொதுமக்கள் தெளிவாகத் தெரிந்தே இருக்கின்றனர். எனவே, உணவுத்துறைபற்றிய இந்தியப் பிரதமரின் இன்றைய பேச்சுக்கும், அதற்குரிய மதிப்பையும் நம்பிக்கையையும் அளிக்கப் பொதுமக்கள் முன்வருவார்களா என்பது ஐயத்திற்குரியதாகும்.

உணவுத் தானியங்களின் விலையைக் குறைக்க அரசாங்கம் எடுத்துக்கொள்ள இருக்கும் சில பல செயல்முறைகள் சிலருக்கு அதிருப்தியளிக்கக் கூடியதாக இருக்கக்கூடும் என்று இந்தியப் பிரதமர் அறிவித்துள்ளார். இவ்வாறு அவர் அறிவித்திருப்பது, அதிமுக்கியமான ஒரு கேள்விக்கு இடமளிக்கக்கூடியதாக இருக்கிறது.

உணவு தானியங்களின் விலை ஏற்றம் நேற்று அல்லது அதற்கு முன்தினம்தான் ஏற்பட்ட புதுமை அல்ல. அதன் விளைவாகப் பொதுமக்களும் குறிப்பாக தொழிலாளர்களும் பட்டுவரும் தொல்லையும் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. உணவுப் பண்டங்களின் விலை ஏற்றம் சில ஆண்டுக் காலமாகவே இருந்து வருகின்ற தீராத தொத்து நோயாகும். அறுவடை காலங்களில் மட்டும் விலை ஏற்றம், ஏறுகின்ற முறையில் இருக்கின்ற விரைவுபோல் இல்லாது, மெள்ள மெள்ள மிகமிகக் குறைந்த அளவே சரிவதும், உடனே முன்னிலும் விலை ஏறிவிடுவதுமான நிலை நீடித்துக் கொண்டே இருக்கின்றது. இந்த நீடித்த நிலையை நாம் தெரிந்திருப்பதைவிட இந்தியப் பிரதமர் நன்கு தெரிந்திருப்பவராவார். இன்று சிலருக்கு அதிருப்தி ஏற்படுவதைக் கூட பொருட்படுத்தாது விலையைக் குறைக்க எல்லாவித செயல் முறைகளையும் மேற்கொள்ளப்போவதாகக் கூறும் இந்தியப் பிரதமர், இத்தகு செயல் முறையை ஏற்கனவே ஏன் எடுத்துக்கொள்ளாது காலங்கழித்துவந்தார் என்றே பொதுமக்களுக்குக் கேட்கத் தோன்றும். இவ்வாறு கேட்கப்பட்டால் இது நியாயமான கேள்வியேயாகும்.

உணவு தானியங்களின் விலையைக் குறைக்க அரசாங்கம் எடுத்துக்கொள்ள இருக்கும் நடவடிக்கைகளில் சிலர் அதிருப்தி கொள்ளக்கூடும் என இந்தியப் பிரதமர் குறிப்பிட்டிருப்பதிலிருந்தே, அவர் இத்துறையில் இதுவரை அலட்சியமாக அல்லது பாராமுகமாக இருந்துவந்ததற்கான காரணத்தையும் அவர் சொல்லாமல் சொல்லி இருக்கின்ருர் என்பது விளக்கமாகிறது. அதாவது, சிலருடைய அதிருப்திக்கும் ஆத்திரத்திற்கும் அஞ்சியே, உணவு தானியங்களின் விலையேற்றத்தைத் தடுக்கத்தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளத் துணிவில்லாதும், விலையேற்றத்தின் விளைவாக பொதுமக்கள்படும் வேதனையைக்கண்டு பாராமுகமாகவும், இந்தியப் பேரரசு இதுவரை இருந்து வந்திருக்கின்றது என்ற உண்மை, நேரு பெருமகன் குறிப்பிலிருந்து வெளியாகிறது.

சாதாரண மக்கள் வாங்கி உண்ணக்கூடிய உணவு தானியங்களின் விலையைக் குறைக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்க முன்வந்தால் அதில் அதிருப்தி அடைகின்றவர்கள் உள்ளனர் என்ற உண்மையை மட்டுந்தான் நேரு பெருமகன் ஒப்புக்கொண்டுள்ளாரேயல்லாது, யார் அவர்கள் என்பதை அவர் சுட்டிக்காட்டவில்லை. அந்த நல்லவர்கள் யார் என்பதை உணவு அமைச்சர் ஜெயின் மக்கள் சபையில் அம்பலப்படுத்தியுள்ளார். உணவு அமைச்சர் குறிப்பிடும் அவர்கள் இவர்கள்தான் :—

"ஆந்திராவில் உள்ள அரிசி மில்காரர்கள் மிக மோசமான முறையில் சமூகத்துக்கு விரோதமாக நடந்துகொண்டிருக்கின்றனர். கொள்ளை இலாபத்திற்கு தானியங்களை விற்பதற்காக பண்டங்களை பதுக்கி வைத்திருக்கின்றனர். கட்டாயக் கோள்முதல் முடிவிற்கு அதுவே காரணம்.''

உணவுத் தானியங்களின் விலையேற்றத்திற்கும், பற்றாக் குறைக்கும் மக்கள் தொகை பெருக்கமோ, உணவு தானிய உற்பத்திக் குறைவோ, தேவை மிகுதியோ, பண வீக்கமோ ஆகிய ஒன்றோ அல்லது பலவுமோ காரணமாக இருந்தாலும் இல்லாமற்போனாலும், உணவு அமைச்சர் குறிப்பிடும் அரிசி வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் பெரிய பெரிய அரிசி மில்காரர்கள் மேற்கொள்ளும் பதுக்கல் முறைதான், உருவாக்கும் கற்பனை உணவு தானியக் குறைவுதான் பெரிதும் காரணம் என்பதை பொதுமக்கள் மறந்துவிடக் கூடாது.

உணவு அமைச்சர் ஜெயின் இந்தப் பதுக்கல் பேர்வழிகளைச் சமூக விரோதிகள் என்று குறிப்பிட்டுள்ளார். இச்சமூக விரோதச் செயலை அவர்கள் நீண்ட காலமாகவே செய்து வருகின்ற உண்மையை, இந்தியப் பேரரசு இதுவரை உணராதிருக்க நியாயமே கிடையாது. சமூக விரோதச் செயலில் சிலர் ஈடுபட்டுவருகின்றனர் என்ற உண்மையை இந்தியப் பேரரசு தெளிவாகத் தெரிந்திருந்துங்கூட, இதுவரை அவர்கள் சமூக விரோதச் செயல் குறித்து கண்டிக்காமலும், தடுத்து நிறுத்த மனமில்லாமலும், அதன் பலனுக சமூகம்படும் அல்லலைக் கண்டும் காணுததுபோலும் இந்தியப் பேரரசு இருந்து வந்திருப்பது தலையாய சமூக விரோதமா இல்லையா என்பதை பொதுமக்களே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

ஆந்திராவில் மட்டுமே அத்தகைய சமூக விரோதிகள் இருக்கின்றனர் என்பதில்லை. அவர் போன்ருர் தமிழ் நாட்டிலும் உள்ளனர். இந்தியத் துணைக்கண்டம் முழுதிலும் அத்திருக்கூட்டத்தினர் பரவி உள்ளனர் என்பதை உணவு அமைச்சர் உணராதிருக்கமுடியாது. இனியாவது இந்தியப் பிரதமர் எடுத்துரைத்தபடி, உணவுத் தானியங்கள், சாதாரண மக்கள் வாங்கி உண்ணக் கூடிய விலைக்குக் கிடைக்கும் படி, இந்தியப் பேரரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வரும் என்றே நாம் நம்புகிருேம். அதே நேரத்தில், இந்தியப் பேரரசு இம்முறை மேற்கொள்ளும் முயற்சியும் எப்பொழுதும்போல் ஆரம்பசூரத்தனமாகவே முடிந்து விடுமோ என்றும் ஐயுறுகின்ருேம்.

தாரமங்கலம் ஊராண்மை கழகத்தில் அண்ணு படத் திறப்பு

'தலைவர்களின் படங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டுவன'

கலைவர்ணர் என். எஸ். கே. கருத்து

சேலம், ஆக. 11—

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த 'தாரமங்கலம் ஊராண்மைக்கழக (பஞ்சாயத்து போர்டு) அலுவலகத்தில் அண்ணு அவர்கள் உருவப்படத்தை கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் 9-ந் தேதியன்று திறந்து வைத்தார்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"என் படுக்கை அறையில் அண்ணு, பெரியார் ஈ. வே. ரா. காந்தி, புத்தர், ஏசுநாதர் ஆகியவர்களின் உருவப் படங்களை வைத்திருக்கிறேன்; அந்தப் படங்களைப் பார்க்குபொழுதெல்லாம் அவர்கள் செய்த சேவை எனக்கு நினைவுக்குவரும். அண்ணு அவர்களின் படத்தைப் பார்க்கும் பொழுது அவருடைய கல்வியைப் பற்றியும் பேச்சுத் திறமையைப் பற்றியும், அறிவு கூர்மையைப் பற்றியும் நினைத்துக் கொள்வேன். அண்ணுவைப்போல் அதிகம் படிக்காமல் இருக்கிறேனே என்றும், அண்ணுவைப்போல் பொது மேடைகளில் அழகாகப் பேச முடியாமல் இருக்கிருேமே என்றும் கவலைப்படுவதுண்டு.

பெரியார் ஈ.வே.ரா. படத்தை பார்க்கும் பொழுது அவருடைய சிக்கனத்தைப் பற்றி எண்ணுவேன்; என்னைப்பற்றி நானே எண்ணிக் கொள்வேன்—'எவ்வளவு சம்பாதித்தாலும் மிச்சம் வைக்காமல் செலவழித்து விட்டோமே'—என்று எண்ணிக் கொள்வேன். அவ்வாறே புத்தர், காந்தி, ஏசு இவர்கள் செய்த சேவைகளையும் எண்ணிப் பார்ப்பேன்.

"ஆகவே, இவர்களிடம் உள்ள நல்ல குணங்களை ஒவ்வொருவரும் தெரிந்துகொண்டு அதன்படி நடக்க முற்பட வேண்டும்.''

ஊர்வலம்

இவ்விழாவிற்கு திரு. பி. இரத்தினசாமி (பிள்ளை) தலைமை வகித்தார்.

துவக்கத்தில் அண்ணு அவர்களும், என். எஸ். கிருஷ்ணன் அவர்களும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அவர்களுக்கு ஊராண்மை கழகத்தாரால் வரவேற்பு இதழ்கள் வாசித்தளிக்கப்பட்டன.

மின்சார சங்கு : அண்ணு துவக்கிவைத்தார்

ஊராண்மைக் கழகத்தாரால் புதிதாக வைக்கப்பட்டுள்ள மின்சார சங்கை அண்ணு திறந்து வைத்தார்.

பொதுக் கூட்டம்

அன்று இரவு நடந்த பொதுக் கூட்டத்தில் அண்ணு அவர்கள் பேசுகையில், சட்டசபையில் தி. மு. கழகம் எவ்வாறு பணியாற்றி வருகிறது என்பது பற்றியும், மக்களிடம் தி. மு. கழகத்திற்கு எவ்வாறு ஆதரவு பெருகி வருகிறது என்றும் விரிவாகக் கூறினுர்.

'ஆளும் கட்சிக்கு சரியான எதிர்க் கட்சி தி. மு. கழகமே'

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி விளக்கம்

சேலம், ஆக. 11—

9—8—57-ல் சேலம்—பொன்னம்மாபேட்டையில், தி. மு. கழகப் பொதுக்கூட்டம் தோழர் பி. கே. மன்னுர் தலைமையில் நடைபெற்றது.

தேர்தலுக்குப் பிறகு தி. மு. கழகம் எவ்வாறு வளர்ந்து வருகிறது என்பதை தோழர் சிற்றுளி ஏ. சுப்பிரமணியம் விளக்கினுர்.

தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தேர்தலுக்குப் பிறகு மற்றக் கட்சிகள் முன்புபோல கூட்டங்கள் போடுவதில்லை; தி. மு. கழகம்தான் ஆங்காங்கே கூட்டங்கள் போட்டுவருகிறது. தேர்தல் சமயத்தில் மாத்திரம் தி. மு. கழகம் மக்களிடத்தில் வருவதில்லை; சாதாரண சமயத்திலும் மக்களிடத்தில் தி. மு. கழகம் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறது.

"இப்பொழுதுள்ள ஆளும் கட்சிக்கு தி. மு. கழகம் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக விளங்குகிறது. சட்டசபையில் எங்களுக்கு (தி. மு. கழகத்திற்கு) அதிக வாய்ப்பு உண்டு.

"தண்டலம் கிராமத்திற்கு சென்னை முதன் மந்திரி காமராசரை அண்ணு அழைத்துச் சென்று மாநாடு கூட்டி அத்தொகுதி மக்களின் குறைகளை எடுத்துக் கூறினுர். காமராசர் பொறுமையாக இருந்து அந்த மக்களின் குறைகளைக் கேட்டார்.

"சட்டசபையில் தி. மு. க. எழுப்பும் புகார்களை உடனடியாகக் கவனிக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துவருகிறது. யார் குற்றம் செய்தாலும் அதைக் கண்டிக்க தி. மு. கழகம் அஞ்சுவதில்லை.

"எதிர்காலத்தில் தி. மு. கழகம்தான் பலம் வாய்ந்து விளங்கப் போகிறது. ஆகவே, மக்கள் தி. மு. கழகத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.''

தோழர்கள் அன்புக்கரசு, வி. சிவப்பிரகாசம் (வழக்கறிஞர்) ஆகியவர்களும் பேசினர். (ந-நி.)

டில்லி கவனிக்குமா ?

சென்னை, ஆக. 13—

சென்னை நகரில் விளையாட்டுத் திடல்கள், குழந்தை பராமரிப்பு நிலையங்கள், வைத்திய விடுதிகள் ஏற்படுத்த சென்னை நகரசபை, டில்லியிடம் உதவி கேட்டுள்ளதாம் !

சேரி சீர்திருத்தத்தைச் சரிவர நிறைவேற்றுவதற்கு ரூ. 40 இலட்சம் மானியம் தரவேண்டும்என்று சென்னை அரசாங்கம், மத்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தியுள்ளதாம்.

கழகச் செய்திகள்

புலியஞ்சுவனம் :

நெல்லை மாவட்டம் புலியஞ்சுதினம் தி. மு. கழகக் கிளையின் புதிய நிர்வாகிகள் தேர்தல் 1—6—57-ல், தோழர் என். பி. எம் அப்துல்காதர் தலைமையில் நடைபெற்றபோது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் :— செயலாளர் : எஸ். என். எம். அப்துல்காதர்; துணைச் செயலாளர்: சிவ. சுப்பையா; பொருளாளர்: அனீபா; மாவட்டப் பிரதிநிதி: அலி சேக் மான்சூர்; செயற்குழு உறுப்பினர்கள் : கோ. அ. மு. மீரான், நவாப், நடராசு, முகம்மது மொய்தீன், பி. செல்வராசு, நாகூர்-மீரான், மு. பி. தங்கையா. இறுதியில் தோழர் பீர்சாகிப் மறைவுக்கு அனுதாபமும், புதிய மாவட்டச் செயலாளர் டி. ஆர். சுப்பிரமணியம் அவர்களுக்குப் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது.

பேர்ணும்பட்டு :

பேர்ணும்பட்டு தி. மு. கழகக் கிளை அமைப்புக் கூட்டம் 1—6—57-ல், தோழர் குடியேற்றம் பொன்னுசாமி தலைமையில் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: கே. முனிரத்தினம்; துணைச் செயலாளர்: அப்துல் கனி; பொருளாளர்: எஸ். இராசகோபாலன்; மாவட்ட உறுப்பினர்கள்: முகம்மது இப்ராகீம், தா. சுப்பிரமணியம்; 17 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பட்டீசுவரம் :

பட்டீசுவரம் தி.மு. கழகக் கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் சு. பத்மநாபன் தலைமையில் 1—6—57-ல், நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :— செயலாளர்: வி. ஆர். வரதாராசன்; துணைச் செயலாளர்: கோ. பக்கிரிசாமி ; பொருளாளர் : எம். காமராஜ்; மாவட்டப் பிரதிநிதி: எல். டி. கிட்டப்பா; மற்றும் ஒன்பது பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செங்கற்பட்டு :

செங்கற்பட்டு நகர பொது உறுப்பினர் கூட்டம் 2—6—57ல் தோழர் ஜே. ஏ. வகாப் தலைமையில் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; செயலாளர்: செ. கோ. விசுவநாதன்; துணைச் செயலாளர்: வை. இரங்கநாதன்; பொருளாளர்: எஸ். வெங்கடேசன்' மாவட்டப் பிரதிநிதிகள்: ஜே. ஏ. வகாப், சொ. கா. சுந்தரேசன்; மற்றும் 15 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இராமம்பாளையம் :

கோவை மாவட்டம் அவிநாசி தாலுகா, இராமம்பாளையம் தி. மு. க. கிளை அமைப்புக் கூட்டம் தோழர் தி. எழிலன் தலைமையில் 5—6—57ல் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: கு. சுரே; துணைச் செயலாளர்: இரா. இளங்கோ; பொருளாளர் அ. க. சாமி.

கீழமண்குடி :

கீழமண்குடி தி. மு. க. கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் 8—6—57-ல், தோழர் மு. கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: கா. அ. லால்பாச்சா; துணைச்செயலாளர்: ஆ. பாண்டுரங்கன்; பொருளாளர்: த. வைத்தியநாதன்; மாவட்டப் பிரதிநிதி: கு. சுந்தரம் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கடையநல்லூர் :

கடையநல்லூர் நகர தி. மு. க. கிளையின் பொது உறுப்பினர் கூட்டம் 9—6—57-ல் செயலாளர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தூத்துக்குடி தோழர் தாளமுத்து கொலை செய்யப்பட்டது குறித்து அனுதாபம் தெரிவிக்கப்பட்டது. நகரிலும், சுற்றுவட்டாரங்களிலும் கழக உட்கிளைகள் நிறுவுவது குறித்து சூழ்நிலை அறிய ஒரு குழு அமைக்கப்பட்டது; மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சி—உறையூர் 10-வது வட்டம் :

திருச்சி—உறையூர் 10-வது வட்டம் தி. மு. க. கிளையின் நிர்வாகிகள் தேர்தல் தோழர் எஸ். எம். சேட் அவர்கள் இல்லத்தில், 16—6—57-ல் தோழர் எம். எஸ். மணி தலைமையில் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: பி. சர்புதீன்; துணைசெயலாளர்: எப். எஸ். ஏ. அஜீஸ் ; பொருளாளர் : ஏ. முகம்மதுகனி; நகரப் பிரதிநிதி : பி. கலிபுல்லா.

அயன்சித்தனேந்தல் :

பாமக்குடி வட்டம் அயன்சித்தனேந்தல் கிராமத்தில் தி. மு. க. கிளை அமைக்கப்பட்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் : செயலாளர் : கே. திராவிடமணி; துணைச் செயலாளர் : என். யு. வெள்ளைச்சாமி; பொருளாளர் : கே. குருசாமி; மாவட்டப் பிரதிநிதி : க. பஞ்சவர்ணம்; மற்றும் 11 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

புதுவை வட்டம் :

புதுவைத் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 20—6—57-ல் நடைபெற்றது. அதுபோது, முதலியார்பேட்டை கொம்யூனைச் சேர்ந்த முருங்கைப்பாக்கத்திலும், உழவர்கரைக் கொம்யூனைச் சேர்ந்த பிள்ளைச்சாவடியிலும், புதுவைக் கொம்யூனைச் சேர்ந்த உப்பளம் நடுப்பேட் பகுதியிலும் தி. மு. க. கிளைகள் அமைத்துக் கொள்ள அனுப்பி வைத்திருந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, அம்மூன்று ஊர்களிலும் கிளைக் கழகங்கள் நிறுவிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

பண்ணுருட்டி :

பண்ணுருட்டி நகர தி. மு. க. கிளையின் புதிய நிர்வாகிகள் தேர்தல் 23-6-57-ல் தோழ சி. இளவழகன் தலைமையில் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர் : ந. இராசகோபால் ; துணைச்செயலாளர் : க. கோவிந்தன் ; பொருளாளர் : ச. இராமச்சந்திரன் ; மாவட்ட உறுப்பினர் : ஆர். பழனிச்சாமி ; மற்றும் 19 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அன்று மாலை நடைபெற்ற பொதுககூட்டத்தில் தோழர்கள் ஜே. தர்மயாஞ்சலு, முகுந்தன், இளவழகன், ரங்கநாதன் ஆகியோர் பேசியபின் மாவட்டச செயலாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் கழகக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

கிழுமத்தூர் :

பெரம்பூர் வட்டம் கிழுமத்தூரில் 24—6—57-ல் 30 உறுப்பினர்களைக் கொண்ட தி.மு.க. கிளை யொன்று அமைக்கப்பட்டது. கழக அமைப்புக் கூட்டத்துக்கு தோழர் ர. பெரியசாமி தலைமை வகித்தார். அதுபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—செயலாளர் : து. கிருட்டினசாமி; துணைச் செயலாளர்: த. இராமலிங்கம்; பொருளாளர்: கி. சுப்பிரமணியம்; மாவட்ட உறுப்பினர்: ம. கோவிந்தசாமி.

சென்னை—16-வது வட்டம் :

சென்னை 16-வது வட்ட தி. மு. க. கிளையின் பொது உறுப்பினர்கள் கூட்டம் 23—6—57ல் தோழர் கோ. செங்குட்டுவன் தலைமை நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: வ செயராமன்; துணைச்செயலாளர்: டி. முத்து; பொருளாளர்: டி. நாராயணசாமி; மாவட்டப் பிரதிநிதிகள்: ப. ஆசைமுத்து, சி. பஞ்சாட்சரம்.

சேலம் :

30—6—57ல், தோழர் இ. ஆர். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற சேலம் நகர தி. மு. கழகக் கிளையின் கூட்டத்தில், நகர செயற்குழுவில் காலியான 6 இடங்களுக்குத் தேர்தல் நடைபெற்றது; அதுபோது தோழர்கள் கே. அங்குசம், ஏ. சுப்பிரமணியம், கே. கே. மகாதேவன், பி. கோபாலகிருஷ்ணன், வி. சிவப்பிரகாசம், கே. ஆர். சித்தன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்னை-மயிலை 44-வது வட்டத் தி. மு. கழக ஆண்டு விழா

சிற்றரசு, பி. பாலசுப்பிரமணியம், அறிவழகன் ஆகியோர் கலந்துகொண்டனர்

சென்னை, ஆக. 13—

"திராவிட முன்னேற்றக் கழகம் இன்று எல்லாத் துறையிலும் முன்னேற்றப் பாதை நோக்கி ஏறுநடைபோட்டு வருகிறது; நமது தனிப்பெருந் தலைவர் அண்ணா தலைமையின்கீழ் நாம் இன்னும், விரைந்து முன்னேற முடியும் என்பதை உறுதியாகச சொல்ல விரும்புகிறேன்.

"இப்பொழுது நம்மில் 15 பேர் தான் சட்ட மன்றத்திற்குப் போக முடிந்தது; என்றாலும், வரப்போகும் காலத்தில், சட்டமன்றம் முழுவதிலும் தி. மு. கழகத் தோழர்களே நிரம்பியிருக்கப்போகிறார்கள் என்பது உறுதி.

"இன்று நாட்டில் அதிகாரவர்க்க அடிமைகள், பதவியின் காரணமாக அடிக்கடி அரசியலில் கட்சிமாறி வருகின்றனர். அவர்களும் ஒருகாலத்தில் கட்சி மாறி நம்முடன்வந்து சேரவருவார்கள் என்பதில் ஐயமில்லை.

"நம்மைப் பார்த்து, 'கடவுள் இல்லையென்று சொல்லுபவர்கள்' எனச் சிலர் சொல்லுகின்றனர். மனித சமுதாயத்துக்குச் செய்யும் தொண்டே கடவுள் தொண்டாகும்; அந்தத் தொண்டையே தி. மு. கழகம் செய்துவருகிறது"

என்று, 10—8—57-ல், சென்னை—மயிலையில் நடைபெற்ற மயிலை 44-வது வட்டத் தி. மு. கழகக் கிளையின் ஆண்டு விழாப் பொதுக் கூட்டத்தில் 'சண்டே அப்சர்வர்' ஆசிரியர் தோழர் பி. பாலசுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அவர் மேலும், பிறப்பின் பேரால் உயர்வு-தாழ்வு கற்பிக்கும் மதம் நமக்கு வேண்டாம் என்றும், 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற சீரிய கொள்கையைக் கடைப்பிடித்தொழுகுவதே தி. மு. கழகத்தின் திட்டம் என்றும், பிறப்பின் காரணமாக ஒரு தனிப்பட்டவரை வெறுக்கும் நோக்கமும் தி. மு. கழகத்திற்கு இல்லையென்றும், சாதியின் பேரால் — மதத்தின் பேரால் பரப்பப்படும் தீய கொள்கைகளுக்கே நாம் விரோதிகள் என்றும், 'அனைவரும் சமம்' என்ற நோக்குடன் சகோதரர்களாக வாழ வேண்டுமென்றும் கூறி, திராவிட இனத்தின் உயர்ந்த பண்பாட்டை எடுத்துக்காட்டிப் பேசினார்.

அடுத்துப் பேசிய தோழர் க. அறிவழகன் அவர்கள், சட்டசபையில் நுழைந்ததின் மூலம் தி. மு. கழகம் ஒரு புதிய—முக்கிய கட்டத்தை அடைந்திருக்கிறது என்றும், இனிமேல்தான் நமக்கு மிக முக்கிய வேலைகள் பல இருக்கின்றன என்றும், தேர்தலுக்கு முன்னால் டி.டி.கே.-யைத் தேர்ந்தெடுத்து அனுப்புவதில் பெருமைப்பட்டுக்கொண்டவர்களே இன்று வருந்தக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டுவிட்டு, தென்னாட்டுக்கு வடநாடு இழைக்கும் பொருளாதார அநீதிக்கு டி.டி.கே. உடந்தையாக இருந்துவருகிறார் என்று கூறிய அவர், வடநாட்டு ஏகாதிபத்தியம் புரிந்துவரும் பல கொடுமைகளை எடுத்து விளக்கிக் கண்டித்தார்.

அடுத்து, தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள் பேசுகையில் 'தி. மு. கழ்கம் பேச்சை விற்று சம்பாதிக்கிறது' என்று கூறியவர்களுக்கு தக்கமுறையில் பதிலளித்துவிட்டுத் தொடர்ந்து பேசுகையில், குறிப்பிட்டதாவது :—

"தமிழ் நாட்டில், இன—நிற வேற்றுமையை ஒழித்து, பிளந்து கிடக்கும் சமுதாயத்தை ஒன்று சேர்த்து, விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி விடுதலைப் புரட்சி செய்து வருகிறது திராவிட முன்னேற்றக் கழகம்; இந்த நாட்டின் உண்மை வரலாற்றை எழுதிப் போற்றும் அளவுக்கு நம் விடுதலைப் போராட்டம் இருக்கும்; நாம் காற்றை விதைத்து புயலை அறுவடை செய்பவர்கள் அல்ல; அன்பை விதைத்து அறிவை அறுவடை செய்பவர்கள்; நாம் விடுதலைகோருவது நம் பிறப்புரிமையாகும்" என்றார்.

மேலும் அவர், ஜனநாயகத்தின் முதல் தத்துவம் ஆண்டவன் சார்பிலே நின்று போராடி மக்களின் இன்னலைப் போக்குவது தான் என்றும், தி. மு. க. அதைத்தான் கண்ணியத்துடன் செய்கிறது என்றும் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், உலக வரலாற்று உண்மைகள் பலவற்றை எடுத்துக்காட்டி, தி. மு. கழகத்தின் கொள்கைத் திட்டங்களை விளக்கி, அனைவரும் தி. மு. க.-வுடன் ஒத்துழைத்து நாட்டின் விடுதலைக்குப் பாடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

கூட்டத்திற்கு தோழர் இராமசாமி தலைமை வகித்தார்.

துவக்கத்தில் தோழர் நாகப்பன் சிறிது நேரம் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார்.

இரப்பர் தொழிலாளர் வேலை நிறுத்தம்

கேரள சர்க்கார் அறிக்கை

திருவனந்தபுரம், ஆக. 13—

இரப்பர் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு நாள் கூலி முறையை ரத்து செய்து, மாதச் சம்பளம், மற்ற சலுகைகளை செய்துதர வேண்டும் என்று கோரி புரட்சி சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த தொழிலாளர்கள் கடந்த 8-ந் தேதி முதல் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளைப் பற்றி தொழில் மன்றம் முடிவு செய்யும் என்றும், தற்போதைய வேலை நிறுத்தத்திற்கு அவசியம் இல்லை என்றும், இப்போது தொழிலாளர்கள் அரசாங்கத் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்வது சட்ட விரோதமானது என்றும் கூறி, கேரள அரசாங்கம் அறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கிறது.

அன்பளிப்புகள்

மாதவரம் தி. மு. க. தோழர் சொக்கலிங்கம் அவர்கள் துணைவியார் 10—4—57ல் ஓர் ஆண் மகவுக்குத் தாயானார்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

ஆறுமுகனேரி தோழர் அருணகிரிநாதன் அவர்களின் ஆண் குழந்தைக்கு தோழர் டி. டிஸ். வேலன் அவர்களால் 'சுகுமாரன்' எனப் பெயரிடப்பட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

14—7—57-ல் தோழர் க. க. தங்கவேல் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கிடாரம் தி. மு. க. கிளையின் துவக்க விழாப் பொதுக் கூட்டத்தில், தோழர் க. கந்தசாமி அவர்களின் பெண் மகவுக்கு தோழர் எஸ். நெடுமாறன் அவர்களால் 'மங்கையர்க்கரசி' எனப் பெயரிடப்பட்டது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ.2 அன்பளிப்பாக தரப்பட்டது.

* * *

வெள்ளியம்பாளையம் தோழர் சேக்முஸ்தபா அவர்களின் துணைவியார் தோழியர் மாபுபீபி ஓர் பெண் மகவுக்குத் தாயானார்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

14—7—57-ல், திருச்சியில் தோழர் கு. நெடுஞ்சேரலாதன் தலைமையில் நடைபெற்ற வெ. மாறன்—இராசம்மா வாழ்க்கை ஒப்பந்த விழாவின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை வட்டம் ஆண்டா ஊரணி எம். மிக்கேல் (உடையார்) மகனும், தற்சமயம் இலங்கையில் வசிப்பவருமாகிய எம். ரூசை (உடையார்) என்பவர் தன் பெயரை எம். எஸ். பாண்டியன் என மாற்றிக் கொண்டார்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 5 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

சென்னை-சைதை தோழர் முனுசாமி அவர்களின் மகவுக்குப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களால் 'நெடுமாறன்' எனப் பெயரிடப்பட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

* * *

வேலூர் (வ. ஆ.) தோழர் சானகிராமன் அவர்களின் துணைவியார் தோழியர் செயலட்சமி அம்மையார் 18-7-57-ல் ஓர் பெண்மகவுக்குத் தாயானார்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு வழங்கப்பட்டது.

* * *

நரசிங்கம்பேட்டை தோழர் என். டி. சாலை அவர்கள் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 நன்கொடை அளித்துள்ளார்.

* * *

சின்னமனூர் தோழர் எஸ். ஏ. முகம்மது அவர்களின் ஆண் குழந்தைக்கு மதுரை தோழர் எஸ். முத்து அவர்களால் 'ஆசைத்தம்பி' எனப் பெயரிடப்பட்டதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 வழங்கப்பட்டது.

* * *

சின்னதாராபுரம் தோழர் ப[illegible] முத்து (மிதிவண்டி நிலையம்) அவர்களின் துணைவியார் தோழியர் உலகநாயகி அம்மையார் ஓர் பெண் மகவுக்குத் தாயானார்; இதன் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

* * *

புதுவை வட்டம் ஏரிப்பாக்கத்தில் நடந்த ஒரு இறுதிச் சடங்கின்போது 'நம் நாடு' வளர்ச்சிக்காகத் தோழர் ச. சிவப்பிரகாசம் அவர்கள் மூலம் ரூ. 1 அன்பளிப்பாக அனுப்பப்பட்டது.

கழகக் கூட்டங்கள்

★

மேலமாத்தூர் :

16—8—57 மாலை 6 மணிக்கு

பேசுவோர் :

சி. பி. சிற்றரசு
எம். வடிவேலு
சோ. சிவபெருமாள்
பி. ஆர். இத்தினம்

★

விருதுநகர் :

நெல்லுக்கடை மைதானத்தில் 16—8—57 இரவு 8 மணிக்கு

பேசுவோர் :

ஏ.வி.பி.ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.
எஸ். இரத்தினம்
சுப்பையா, அரங்கநாதன்

சூலூர் பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதி

தி.மு.க. தோழர்கட்கு:

கோவை மாவட்ட தி. மு. க. துணைச்செயலாளர் தோழர் வி. சண்முகநாதன் அறிவிப்பதாவது :—

இம்மாதம் கீழே குறிப்பிட்டுள்ள நாட்களில் சூலூர் தி. மு. க. அலுவலகத்தில் தோழர்கள் கோவை செழியன், மு. மா. சண்முகசுந்தரம் ஆகிய இருவரும் புதிய உறுப்பினர் சேர்க்கும் பணியில் ஈடுபடுவர். சூலூர் தி. மு. கழகத்தின் புதிய தேர்தல் நடைபெற விருப்பதால் ஆர்வமுள்ளவர்கள் அனைவரும் வந்து உறுப்பினராகச் சேர வேண்டுகிறேன்.

உறுப்பினர் சேர்க்கும் நாட்கள் :—17-8-57 மாலை 7 மணி முதல் இரவு 10 மணிவரை ;

18—8—57 காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை.

'மந்திரி பதவியை நம்பியல்ல; மக்கள் சக்தியை நம்பியே தி. மு. கழகம் வளருகிறது'

தாரமங்கலம் கூட்டத்தில் அண்ணா கருத்தோவியம்

சேலம், ஆக. 13—

சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தாரமங்கலத்தில் 9—8—57-ல் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் ஒன்று தோழர் வையாபுரி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இ. ஆர். கிருஷ்ணன், மற்றும் பலரும் பேசினர்.

அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"தி. மு. கழகத்தைச் சேர்ந்த 15 பேர் சட்டசபையில் இருக்கிறோம். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அதிக உதவி செய்ய வேண்டிய அவசியத்தைப் பற்றியும், சிறு தொழில்கள் பெருக வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியும் சட்டசபையில் பேசி இருக்கிறோம். நாங்கள் சட்டசபைக்குச் சென்ற பின் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது. சனநாயக முறைப்படி சபையில் நாங்கள் பேசுவதைக்கண்டு காங்கிரஸ்காரர்கள் ஆச்சரியப்படுகிறார்கள். எங்களை அமைச்சர்கள் 'நாசக்காரக் கூட்டம்' என்று கூறுகிறார்கள். நாசக்காரக் கூட்டமாக இருந்தால் இவ்வளவு பேர் நீங்கள் இங்கு கூடுவீர்களா? அமைச்சர்கள் அவ்வாறு சொல்வதைப் பற்றி எங்களுக்குக் கவலையில்லை.

"சுயாலத்திற்காகப் பாடுபட நாங்கள் 15 பேர் சட்டசபைக்குச் செல்லவில்லை; சட்டசபையில் 15 பேரும் பேசுகிறோம் என்றால், வெளியே உங்கள் ஆதாவும் எங்களுக்குத் தேவையாக இருக்கிறது.

"டாட்டா போன்ற முதலாளிகள் காங்கிரஸ் கட்சிக்கு இலட்சக்கணக்கில் பணம் தருகிறார்கள் ; அவ்வளவு பணத்தையும் கொடுத்துவிட்டு அவர்கள் சும்மா இருப்பதில்லை. அவர்கள் கொடுத்த தொகைக்குப் பன்மடங்கு இலாபத்தையும் சம்பாதித்துக் கொள்கிறார்கள். பணபலத்தை நம்பித்தான் காங்கிரஸ் கட்சி இருக்கிறது; ஆனால், தி. மு. கழகமோ, மக்களின் சக்தியையே நம்பி இருக்கிறது. தி. மு. கழகத்தில் பணக்காான் இல்லை. பாட்டாளி — தொழிலாளியின் ஆதரவுடன்தான் தி. மு. கழகம் வளர்ந்துவருகிறது.

"பாட்டாளிகள் — தொழிலாளிகள் நல்வாழ்க்கை நடத்த, நம்நாடு தொழில் வளத்துடன் விளங்க திராவிட நாடு தனியாகப் பிரிந்தால்தான் முடியும். வடநாட்டுப் பிடிப்பில் இருக்கும்வரை நம் நாடு முன்னேற முடியாது.

"மத்தியப் பேரரசின் பிடிப்பில் இருக்கும்வரை சென்னை மாநிலம் முன்னேறாது என்பதை அமைச்சர்களும் உணருகிறார்கள் ; ஆனால் அதனை வெளியில் பகிரங்கமாகச் சொல்லத்தான் பயப்படுகிறார்கள்.

"இன்றைக்கு இல்லாவிட்டாலும் 10 அல்லது 15 ஆண்டிலாவது திராவிட நாடு கிடைத்துவிடும். நானோ மற்றவர்களோ மந்திரிகளாக ஆக வேண்டும் என்பதற்காக திராவிட நாடு பிரிய வேண்டும் என்று கூறவில்லை. திராவிடநாட்டில் தாராளமாக காங்கிரஸ்காரர்களே மந்திரி பதவி வகிக்கலாம். மத்தியப் பேரரசின் பிடிப்பில் இருந்து விடுபட்டு சுதந்திரமாக திராவிட நாடு இருக்க வேண்டும் என்பதே எங்கள் ஆசை.

"எங்களை நாஸ்திகர்கள் என்றும் தவறாகச் சிலர் பிரசாரம் செய்கிறார்கள். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றுதான் நாங்கள் சொல்லுகிறோம். ஆகவே எங்களை நாஸ்திகர்கள் என்னும் பொய்ப் பிரச்சாரத்திற்கு நீங்கள் செவி சாய்க்காதீர்கள். தி. மு. கழகத்தில் எல்லோரும் சேர்ந்து, கழகத்தைப் பலப்படுத்துமாறு உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(ந. கி.)

பீடித் தொழிலாளர் அறப்போர்

கலெக்டர் அலுவலகத்தின் முன்பு மறியல்

சேலம், ஆக. 13—

சேலம் கலெக்டர் காரியாலய வாயிலின் முன்பு 12-ந் தேதியன்று சேலம் ஐக்கிய பீடித் தொழிலாளர் சங்கச் செயலாளர் கூடுமியான் தலைமையில் 12 பீடித் தொழிலாளர்கள் வழியில் வரிசையாக உட்கார்ந்து வழியை அடைத்துக் கொண்டு 'சத்தியாக்கிரம்' செய்தனர்.

சேலத்தில் உள்ள இரு பெரிய பீடிக் கம்பெனி முதலாளிகள் ஏற்கெனவே கொடுத்து வந்த கூலியில் இரண்டணா குறைத்து தொழிலாளர்களுக்குக் கொடுப்பதை எதிர்த்தும், பீடித் தொழிலாளர்களுக்கு சட்டம் கொண்டு வரும்படி கோரியும், கலெக்டர் தலையிட்டு சமரசம் செய்து வைக்குமாறு கோரியும் பீடித் தொழிலாளர்கள் இந்த சத்தியாகிரகத்தில் ஈடுபட்டனர்.

லேபர் அதிகாரியிடம் முறையிடுமாறு கூறி, அவர்களைக் கலைந்து செல்லுமாறு போலீஸ் அதிகாரிகள் கூறினர். கலெக்டர் தான் தலையிட்டு சமாசம் செய்து வைக்க வேண்டுமென்று தொழிலாளர்கள் கூறிவிட்டு, தொடர்ந்து மாலை 5 மணிவரை சத்தியாக்கிரகம் செய்தனர். பிறகு அமைதியாகக்கலைந்துசென்றனர். யாரும் கைது செய்யப்படவில்லை.

இரண்டாவது நாள்

சேலம், ஆக. 13—

மறுநாளும் கலெக்டர் காரியாலய காம்பவுண்டு வாசல் வழியின் குறுக்கே உட்கார்ந்துகொண்டு இவர்கள் சத்தியாக்கிரகம் செய்தனர் அவர்களனைவரையும் (மொத்தம் 13 பேர்கள்) போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருந்ததாக போலீசார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 13 தொழிலாளர்களையும் நகர சப்-மாஜிஸ்திரேட் முன்பு போலீசார் ஆஜர் செய்தனர். தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை தொழிலாளர்கள் மறுத்ததால் அவர்கள் 13 பேரையும் 21-ந் தேதி வரை காவலில் வைக்குமாறு மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார்.

(ந-கி.)

'ஒப்பந்தத்தை மீறுகிறார் பண்டா'

'உறுதிமொழி காற்றில் பறக்கிறது'

இலங்கைப் பிரதமரின் போக்கிற்கு தமிழரசுக் கட்சித் தலைவர் கண்டனம்

பிரதமர் பண்டாரநாயகா மழுப்புகிறார்

கொழும்பு, ஆக. 13—

தங்களுடன் செய்துகொண்ட சமரச ஒப்பந்தத்தை மீறும் வகையில் பிரதமர் பண்டாரநாயகா அறிக்கை வெளியிட்டிருப்பதாக தமிழரசுக் கட்சியினர் குற்றம்சாட்டியுள்ளனர்.

அண்மையில் பண்டா விடுத்த அறிக்கையின் இரு அம்சங்கள் தங்களுடன் ஒப்பந்தம் செய்துகொண்டபோது தெரிவித்த கருத்துக்கும் தந்த உறுதிமொழிக்கும் மாறாக இருப்பதாக அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர். இப்படி தந்த உறுதிமொழியை, பிரதமர் மீறுவது, தங்களது நம்பிக்கைக்குக் குந்தகம் விளைவிப்பதாகும் என்றும் அவர்கள் கூறியிருக்கின்றனர்.

பண்டாவின் அறிக்கையில், தமிழரசுக் கட்சியினர் ஆட்சேபிக்கும் அம்சங்களாவன :—

(1) சிங்களத்தை ஆட்சிமொழி ஆக்குவதற்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் 1960-ம் ஆண்டு வரை அல்லது அதற்குப் பிறகு சிறிது காலம்வரை மட்டுமே தமிழர்கள், சர்க்காருடன் தமிழிலேயே கடிதப் போக்குவரத்து நடத்த உரிமையுடையவராவர் ; (2) சிங்களவரைக் குடியேற்றுவது சம்பந்தமாக பிரதேசக் கவுன்சில்களுக்குத் தரப்படவிருக்கும் அதிகாரம், பிரதேசம் சம்பந்தப்பட்ட சிறு திட்டங்களுக்கு மட்டும் என்ற அளவில் வரையறுக்கப்படும்.

இவை குறித்துத் தமிழரசுக் கட்சியின் தலைவரான எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார் ; அதில் அவர் கூறுவதாவது :—

"தமிழ் உபயோகம் பற்றிய எனது நான்கு அம்சத் திட்டத்தை விளக்கி பிரதமர் பண்டாரநாயகா மக்கள் சபையில் அறிக்கை ஒன்று வெளியிட்டார் ; அதில் அவர், தமிழில் சர்க்காருடன் கடிதத் தொடர்புகொள்வது, சர்க்கார் வேலைகளைத் தமிழிலேயே நடத்துவது என்ற ஏற்பாடுகள் நிரந்தரமானவை என்று தெளிவாகக் கூறியிருந்தார். ஆனால் நேற்றைய அறிக்கையில் பண்டாரநாயகா, 'இந்த ஏற்பாடுகள் 1960-ம் ஆண்டு வரைதான் இருக்கும்' என்று தெரிவித்திருக்கிறார் ; 'இது மக்கள் சபையில் தெரிவித்த உறுதிமொழியை மீறுவதாகும்' என்று நான் வருத்தத்துடன் கூறவிரும்புகிறேன்.

"நாங்கள் பிரதமருடன் பேச்சுவார்த்தை நடத்திய அடிப்படை எல்லாம், பிரதமர் தனது நான்கு அம்சத் திட்டத்திலிருந்து விலகிச் செல்லவில்லை என்பது மட்டுமின்றி 'இந்த நான்கு அம்சத் திட்டம் தமிழர்களின் உரிமை காக்கப் போதுமானதல்ல' என்பதுதான்.

"தமிழ்ப் பகுதிகளில் சிங்களவரைக் குடியேற்றுவது பற்றி நாங்கள் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் வாசகங்களோ, பொருளோ, சிறு திட்டங்கள்—பெரும் திட்டங்கள் என்ற வரைவறை எதையும் கொண்டிருக்கவில்லை. பேச்சுவார்த்தையின் எந்தக் கட்டத்திலும், 'சிறு திட்டங்கள் மட்டும்தான்' என்று கூறப்படவில்லை; செய்துகொண்ட ஒப்பந்தப்படி, ஒரு பிரதேசத்தில் குடியேறுவது பற்றிய எல்லா அதிகாரங்களும், பிரதேசக் கவுன்சில்களிடமே ஒப்படைக்கப்படல் வேண்டும்."

பண்டா மழுப்புகிறார் !

"நான் மக்கள்சபையில், பொதுவாகத் தெரிவித்த நான்கு அம்சத் திட்டங்களின் நோக்கத்திலிருந்து விலகிச் செல்லவில்லை; சீக்கிரமே இது குறித்துக் கொண்டுவரப்படும் மசோதாவில் விளக்கங்கள் இருக்கும் இதில், கஷ்டம் எதும் இருக்குமென நான் நினைக்கவில்லை" என்று, பண்டாரநாயகா கூறியிருக்கிறார்.

"தேவையானால் நான் மீண்டும் தமிழரசுக் கட்சியினருடன் பேச்சுவார்த்தை நடத்துவேன்; அதுவரை, நட்புறவுக்கும்—கூட்டுறவுக்கும் நாம் கண்டுள்ள அடிப்படையை யாரும் சீர்குலைத்துவிட வேண்டாம்" என்றும் பண்டாரநாயகா கூறியுள்ளார் !

சேனநாயகா மகிழ்கிறார் !

பண்டாரநாயகாவின் அறிக்கை, நாடெங்கிலும் பெரும் கிளர்ச்சி நடத்தப்போவதாக அறிவித்திருந்த முன்னாள் ஆளும் கட்சித் தலைவரும் — பிரதமருமான டட்லி சேனநாயகாவிற்கு மகிழ்ச்சியைத் தந்திருக்கிறதாம் !

அவர், 'பிரதமர் பண்டா கீழிறங்கிவருகிறார்' என்று பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறாராம் !

சென்னை 8-வது வட்டம் தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

15—8—57 காலை 9-மணிக்கு, மேற்படி வட்ட செயற்குழுவின் அவசரக் கூட்டம், முத்துகிருஷ்ணன் தெரு, எண் 28 இல்லத்தில் நடைபெறும் ; கழக சம்பந்தமான சில முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்

குத்தாலம் தி.மு.க. படிப்பக சிறப்புக் கூட்டம்

16—8—57 பகல் 1 மணிக்கு குத்தாலம் தி. மு. க. படிப்பகத்தில் மேற்படிக் கூட்டம் அறிவுடைநம்பி தலைமையில் நடைபெறும் ; நாகூர் அனீபாவும் கலந்து கொள்வார். குத்தாலம் அரங்கநாதன் குழுவினரின் இன்னிசையும் உண்டு.

சொத்துவரிவிதிப்பிலிருந்து அன்னிய கம்பெனிகட்கு விலக்களிக்கப்படும் ?

டில்லி சர்க்கார் முடிவு !

புதுடில்லி, ஆக. 13—

சொத்து வரி மசோதாவில் சில முக்கியமான திருத்தங்களைச் செய்யப்போகிறதாம் டில்லி சர்க்கார்.

மந்திரி சபை பலமுறை கூடி விவாதித்த பின் இந்த முடிவை மேற்கொண்டனராம்.

நஷ்டத்தில் நடைபெறும் கம்பெனிகள், விரிவுபடுத்த திட்டங்களுக்கு அங்கீகாரம் பெற்றுள்ள நிறுவனங்கள், இந்திய கப்பல் போக்கு-வரத்து கம்பெனிகள், அன்னிய கம்பெனிகள் இவற்றிற்கெல்லாம் சொத்து வரி விதிப்பிலிருந்து விலக்களிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்த விலக்களிப்பதின் விளைவாக முன்பு எதிர்பார்க்கப்பட்ட 15 கோடி ரூபாயைவிட ரூ. 4 கோடி குறைவாகவே கிடைக்கும்.

அகதிகளுக்கு ரொக்க நஷ்ட ஈடு

ரூ. 61 கோடி வழங்கப்பட்டதாம்

புதுடில்லி ஆக. 12—

"மேற்கு பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்த அகதிகளில் 2 இலட்சம் பேருக்கு டெல்லி சர்க்கார் இதுவரை ரூ. 61 கோடி வரை நஷ்டஈடாகத் தந்திருக்கிறார்கள்"

என்று, அகதிகள் மந்திரி மேகர் சந்த்கன்னா மக்கள்சபையில் தெரிவித்திருக்கிறார்.

மேலும் 7,000 பேர்களுக்கு இன்னும் ஒரு மாத காலத்தில் இந்த நஷ்டஈடு வழங்கப்பட்டுவிடும் என்றும் அவர் தெரிவித்ததுடன், ரொக்க நஷ்டஈடாக அகதிகளுக்கு வழங்குவதற்கென ஒதுக்கப்பட்டிருந்த ரூ. 45 கோடியும் தீர்ந்துபோய் விட்டது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

ஏ.வி.பி. ஆசைத்தம்பிக்குப் பாராட்டு—தேநீர்விருந்து

"16—8—57 மாலை 5-மணிக்கு விருதுநகர் நாடார் பரிபாலன சங்கக் கட்டிடத்தில், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராகத் தேர்வு பெற்றமை குறித்து ஓர் பாராட்டு—தேநீர் விருந்து நடைபெறும்" என, நகர தி. மு. க. செயலாளர் நே. சுப்பிரமணியன் அறிவிக்கிறார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.